**செ. கு. எண்**:131 **நாள்**:4.04.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 4.4.2012

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், நெல்லிமலை காப்புக் காட்டிற்கு வெளியே 4.4.2012 அன்று இலை பறிக்கச் சென்ற தேக்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ரங்கசாமி என்பவரின் மனைவி திருமதி பழனியம்மாள் காட்டு யானை தாக்கியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த பழனியம்மாள் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான திருமதி பழனியம்மாளை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**